# A Journey in Search of Action

By Shilpa Varatharajulu

## Part 1

சாதாரணமாக கதை கேட்பது என்பது அனைவருக்கும் பிடித்தமான ஒன்று. எனக்கும் கதை கேட்பது என்பது பிடித்தமான ஒன்று . இக்கதை மற்ற கதைகளை போல் இல்லாமல் மிகவும் மாறுபட்ட கதை வடிவத்தை கொண்டது .
"எந்த ஒரு வினைக்கும் ஓர் எதிர்வினை உண்டு " என்பது நியூட்டனின் விதிகளில் ஒன்று... அதுபோல் செய்யும் வினை நன்றாகினும் , தீதாகினும் அஃது தன்னை தேடி ஒருநாள் வரும் என்பது அனைவரும் அறிந்த உண்மை. செய்யும் வினை எதுவாகினும் அதற்கான பலன் தன்னை தேடி வந்தே ஆகும்... எவ்வளவு யுகமாயினும்...! ஒருநாள் அவ்வினை அச்சார்ந்தவனை தேடி வந்தே ஆகும்.... இக்கதை ஓர் வினையால் உருவானது... அவ்வினை அச்சார்ந்தவரை தேடி வந்ததா ? இல்லை மறைந்ததா ? என்று பார்க்கலாம்... இறுதியில் நடந்தது என்ன ? என்பதை அறிய தொடர்ந்து படியுங்கள்...

நான் இப்பொழுது கதைக்குள் செல்ல போகிறேன்.வினையை தேடி..... என்னோடு உள்ளே வர விரும்புபவர்கள் என் கைகளை பிடித்துக் கொண்டு வாருங்கள் ... பயணத்திற்கு செல்லலாம்.. வழியில் தொலைந்து விடாதீர்கள்.

வினையை தேடி ஒரு பயணம்...

............*..................*....................*.................*...........

ஓர் பழைய நூலகம்... அதில் பல வருடங்களுக்கு முந்தைய நிகழ்வுகளின் தொகுப்புகளுக்கான பல பகுதிகள் அங்கு இடம்பெற்றிருந்தன. நூலகத்தின் வலப்புறம் பல வருட தொகுப்புகளும் இட புறம் புது தொகுப்புகளும் இருந்தன. பல வருட தொகுப்புகளில் செய்திதாள்கள், புத்தகங்கள் மேலும் பல முக்கிய குறிப்புகள் நிறைந்தது. அந்த நூலகம் பார்ப்பதற்கு மிகவும் அமைதியாகவும், அழகான உள்தோற்ற அமைப்பும் கொண்டதாக இருந்தது. புத்தகங்கள் அனைத்தும் வரிசையாக சீரான முறையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. சுவர்களில் அழகிய வண்ண ஓவியங்கள் இருந்தன. அந்த சுற்றுச்சூழல் மனதிற்கு அமைதியை தரும் வண்ணம் இருந்தது. கீழே மேசையுடன் கூடிய நான்கு நாற்காலிகள் நூலகத்தின் அனைத்து பகுதிகளிலும் இருக்கின்றன. அவை நுட்பமான கலை வல்லுனர்களால் வடிவமைக்கப்பட்டிருந்தன . அவற்றின் வழியாக சூரிய ஒளி உள்நுழைந்தன. அவை மிகவும் புத்துணர்ச்சி தரும் விதமாக இருந்தது.. நூலக வாசகர்கள் நாற்காலிகளில் அமர்ந்து புத்தகங்களை வாசித்துக் கொண்டிருந்தனர். பலர் புத்தகங்களை தேடிக் கொண்டும் இருந்தனர்.அதில் மூவர் மட்டும் மிகவும் அவசர அவசரமாக எதையோ தேடுவது போல் இருந்தது.பல மணி நேரமாக இவர்கள் மட்டும் எதையோ தேடி கொண்டிருக்க ... அனைவரின் பார்வையும் அவர்கள் மேல் திரும்பியது...

" இவர்கள் எதை இவ்வளவு நேரமாக தேடுகின்றனர் ...? " - என்ற கேள்வி அனைவரின் மனதிலும் எழுந்தது. ஆனால் அவர்களோ எதையும் பொருட்படுத்தாமல், தான் வந்த வேலையில் மிகவும் கவனமாக இருந்தனர்....

அந்த மூவரும் வலப்புறம் உள்ள பல வருட தொகுப்புகளில் பதிவுகளை வாசித்தபடி இருக்க , இதை ரொம்ப நேரமாக கவனித்துக் கொண்டிருந்த நூலக உரிமையாளர்.. அவர்களிடம் சென்று, தாங்கள் எதை தேடுகிறீர்கள்...? என்று கேட்டார்.
அவர்கள் மூவரும் .. நாங்கள் பல வருட தொகுப்புகளின் செய்திதாள்களில் முக்கிய செய்திகளை பட்டியலிடுவதாக கூறினர். பிறகு அவ்விடத்தை விட்டு சென்றார்.
செய்திதாள்கள் மற்றும் பல முந்தைய தகவல்கள் அனைத்தும் அருகாமை நூலகத்தின் தேடல்களுக்கு பிறகு அவை கிடைத்தது.

அவற்றை மிகுந்த சந்தோசத்துடன் சேகரித்துக் கொண்டு அங்கிருந்து செல்கின்றனர்.

இவர்கள் மூவர் யார்? எதற்காக இவ்வளவு நேரம் எதையோ தேடியபடி அலைந்து கொண்டு இருந்தனர்? இவர்கள் இவ்வளவு நேரம் தேடும் அளவிற்கு என்ன தான் அந்த செய்திகளில் இருந்தது ? என்ற கேள்வி அங்கிருந்த அனைவரின் மனதிலும் எழுந்து...

அந்த மூவர் செய்திகளை சேகரித்துக் கொண்டு அங்கிருந்து சென்றனர். பிறகு சில மணி நேரத்திற்கு பின்னர் அந்த நூலகத்தினை அடைக்கும் நேரம் ஆக கடையின் உரிமையாளர் அனைத்து ஜன்னல் மற்றும் மின் விளக்குகளை அணைத்துவிட்டு கிளம்ப தயாரானார்.
அப்போது திடீரென்று ஓர் எண்ணம் அவர் மனதில் எழுந்தது...!

அது என்னவென்றால் , காலையில் வந்த மூவர்கள் பற்றிய சிந்தனை தான். அவர்கள் அப்படி எதை தான் தேடினார்கள் என்ற சந்தேகத்தில் திரும்பவும் உள்ளே சென்று , பல வருட தொகுப்புகள் உள்ள இடத்திற்கு சென்று.. அந்த செய்திதாள்கள் மற்றும் கட்டுரை சார்ந்த புத்தகங்களை தேடிய அவருக்கு இறுதியில் அவர்கள் எதை தேடினர் என்ற வினாவிற்கு பதில் அளிக்கும் விதமாக அவை கிடைத்தன. அதனை பார்த்த அவருக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்நது...!
உடலெல்லாம் வியர்த்து... மூச்சுவாங்கும் அளவிற்கு பயத்தில் உரைந்தார் உரிமையாளர். மனமெங்கும் பல கேள்விகள்....
ஏன் ?? எதற்கு ?? என்ற பல தோன்றின. அவர்களை எச்சரிக்க வேண்டும் என்ற ஓர் எண்ணம் ஆழ்மனதில் கடலென எழுந்தது...

இவர் இவ்வாறு பயப்படும் அளவிற்கு அந்த செய்தி எதைப் பற்றியதாக இருக்கும்..? என்ற கேள்வி அவருடன் ... தொடர்ந்து நம் மனதில் இந்நேரம் எழுந்திருக்க கூடும்...

தொடரும்....
தொடர்ந்து படியுங்கள்... மேலும் விருவிருப்பான திருப்பங்கள் காத்திருக்கின்றன.
விருவிருப்பான கொலை மர்ம தொடர் கதை....
வினையை தேடி ஒரு பயணம்.... - சில்பாபகுதி :

Part 2

அந்த நூலக உரிமையாளர் மிகவும் குழப்ப நிலையில் அவ்விடதை விட்டு செல்கிறார்.

அன்றிரவு புத்தக பதிவுகளை தேடி பெற்று வந்த அந்த மூவரும் தங்களின் ஓய்வறைக்கு வந்து அமர்கின்றனர். பிறகு எடுத்து வந்த புத்தக மற்றும் செய்தித்தாள் குறிப்புகளை ஆராய்ந்து பார்கின்றனர்.
தீடீரென ஒரு குரல் .... இது என்னது ??? இதை யார் எடுத்துக் கொண்டு வந்தது ?? என்ற கேள்வி அடுத்தடுத்து வர... குரல் வந்த திசையை நோக்கி திரும்பி பார்கின்றனர். அதை பார்த்த மூவரும் .., ஆமாம்.. இது என்னது ? என்று மூவரும் ஒரே சமயத்தில் ஒருவரை பார்த்து கேட்டுக் கொள்ள ... இல்லை இதை நான் எடுக்கவில்லை...!! நீ தான்... இல்லை நீ தான் என்று ஒருவர் மேல் ஒருவர் பழிபோட்டுக் கொள்ள ... இதனை படிக்கும் நமக்கும் இந்நேரம் எதுவும் விழங்கியிருக்காது... யார் இவர்கள் ? எதை யார் எடுக்கவில்லை ? என்ற கேள்வி வர தொடங்கியிருக்கும்.

அன்று காலை சக்தி , மித்ரா, மீரா ஆகிய மூவரும் நூலகத்திற்கு சென்று புத்தக மற்றும் செய்தி மாதிரிகளை சேகரிக்க முடிவு செய்து நூலகத்திற்கு செல்கின்றனர். அங்கு நீண்ட நேரத்திற்கு பிறகு சேகரித்த குறிப்புகளை தங்கள் ஓய்வறைக்கு வந்த பிறகு சரிபார்த்துக் கொண்டிருந்த மீரா , மித்ரா -வை பார்த்து இதை யார் கொண்டு வந்தது ? இதை பற்றி நாம் தேடவில்லையே ...! பிறகு எப்படி ??? என்று குழம்பி கொண்டிருந்த மீரா மற்றும் மித்ரா அருகே வந்த சக்தி இங்க என்ன பிரச்சனை ...? ஏன் இப்படி கத்திக் கொண்டு இருக்குறீர்கள் ? என்று கேட்கிறாள்.. மீரா நடந்தவற்றை கூறுகிறாள்... சக்தியும் இதை பார்த்து இதை நானும் கொண்டு வரவில்லையே...!! என்று கூற மூவரும் அது எதை பற்றிய செய்தி என்று கூற பார்க்காமல் அதை தூரமாக வைத்துவிட்டு உறங்க சென்றனர்.
இந்த சக்தி, மீரா, மித்ரா மூவரும் துப்பறிவு துறையில் படிக்கின்ற மாணவிகள்.
தங்களின் இறுதி படிப்பிற்கான குறிப்புகளை தேடி நூலகத்திற்கு செல்கின்றனர்.
அங்கு தவறுதலாக ஒரு செய்தி தொகுப்பு இவர்கள் தேடிய குறிப்புடன் கொண்டுவரப்படுகிறது. இதை பார்த்து தான் மூவரும் குழம்பினர்.
இதற்கிடையில் நூலக உரிமையாளர் மிகவும் கவலையுடன் இருக்கிறார்.

இதனை பார்த்துக் கொண்டிருந்த அவரது மகன் அவரிடம் சென்று ஏன் ? கவலையாக இருக்கிறீர்கள் ? என்று கேட்க... முதலில் தயங்கிய அவர் பிறகு தன் மகனிடம் நடந்தவற்றை கூறுகிறார்... இதனை கேட்ட மகன் இதில் என்ன இருக்கிறது? நூலகம் எல்லோருக்கும் பொதுவானது அப்படி இருக்கும் பொழுது ஏன் கவலை கொள்கிறீர்கள் ? என்று சமாதானம் செய்ய... அவர் சிரித்தபடி தன்

மகனிடம் நீ நினைக்கின்ற அளவுக்கு அது எளிதான விஷியம் இல்லை... அதில் உள்ள ஆபத்து தெரியாமல் நீ பேசி கொண்டிருக்கிறாய் என மர்மமாக சிரிக்க... இதை கேட்ட மகனுக்கு கோபம் வந்துவிட்டது.. அந்த மூனு பேரை விட நீங்கள் இப்படி பேசுரது தான் வித்யாசமாக இருக்கிறது அப்பா என்று கூற... அவர் தன் மகனிடம் சொல்ல ஆரம்பிக்கிறார்.. அந்த குறிப்பு ஒரு பள்ளியை பற்றியது... என்று ஆரம்பிக்க கோபத்தில் இருந்த மகன் மெல்ல கவனிக்கிறான்...
பல வருடத்திற்கு முன் மிகுந்த செல்வாக்குடன் இருந்த பள்ளி இன்று அடைப்பட்டு இருக்கிறது... ஏழை பிள்ளைகள் படிக்க அமைக்கப்பட்ட ஒரு கிறிஸ்துவ பள்ளி தான்

" செய்ன்ட் வில்லியம் "

அப்பள்ளியின் தலைவர் ஜான்சன் மிகவும் இரக்க குணம் கொண்டவர். அவரது மனைவி ஸ்டெல்லா இருவரும் அப்பள்ளியின் வளர்ச்சிக்காக மிகவும் பாடுபட்டனர். சிறிது நாளில் அவர்கள் செய்த முயற்சியின் பலனாக பள்ளி நல்ல நிலைக்கு வந்தது. பிறகு இருவரும் சேர்ந்து ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவும் விதமாக ஒரு அமைப்பை உருவாக்கி குழந்தைகளை பார்த்துக் கொண்டு வந்தனர். எல்லாம் நன்றாக இருக்கின்ற சமயத்தில் நடந்த ஒரு மர்மமான மரணத்திற்கு பிறகு அடுத்தடுத்து நிகழ்ந்த நிகழ்விற்கு பிறகு அதன் நிலை மாறியது. கடந்த பத்து வருடங்களாக இப்பள்ளி அடைப்பட்ட நிலையில் தான் உள்ளது. இன்று வரை கொலைக்கான காரணம் கண்டறிய முடியாததால் அவை காவல்துறை கட்டுப்பாட்டில் இருந்துவருகிறது. மேலும் அப்பள்ளியில் இருந்த பலரும் அங்கு பேய் நடமாட்டம் இருப்பதாகவும் ... அங்கு செல்பவர்கள் மர்மமாக கொல்லப்படுகின்றனர் என்றும் பலர் பேசுவர். என்று கூற ...மகன் மிகுந்த ஆர்வத்துடன் ..., அப்படி சென்றாள்...?? என்று கேட்க தந்தை கோபம் கொண்டு அந்த எண்ணத்தை குழிதோண்டி புதைத்துவிடு என்று கத்துகிறார்.
மகன் சரி கோபப்படாதீர்கள் நான் விளையாட்டிற்கு கேட்டேன் என்றான் சிரித்தபடி... தந்தை நீ விளையாட்டிற்கு கேட்டாயா ? உன்னை பற்றி எனக்கு தெரியாதா ...!! ஒழுங்கா வேலைய பார்த்தால் சரி என்று கூறிக்கொண்டே அந்த மூவரை பற்றி யோசித்தபடியே உறங்குகிறார். காலை விடிகிறது...வழக்கம் போல் அனைவரும் பரபரப்பாக வேலைக்கு சென்று கொண்டிருக்க...சக்தி, மீரா, மித்ரா மட்டும் பொறுமையாக கண்விழித்து விடிந்து விட்டதா ?? என தனது நாளை தொடங்குகின்றனர்.